www.Padasalai.Net www.CBSEtips.in

H

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

## ஒன்பதாம் வகுப்பு

பதிவ எண்: 91130

நேரம்: 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 7×1=7

1. தமிழ்விடு தூது ............ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர் நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. *விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.*
   அ) ............ இனம் ஆ) வண்ணம் ............
   இ) ............ குணம் ஈ) வனப்பு ............
   க) மூன்று, நூறு, பத்து, எட்டு உ) எட்டு, நூறு, பத்து, மூன்று
   ங) பத்து, நூறு, எட்டு, மூன்று ச) நூறு, பத்து, எட்டு, மூன்று
3. *பொருத்தமான விடையைத் தேர்க:*
   அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்
   ஆ) நீரின்றி அமையாது யாக்கை - ஔவையார்
   இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
   க) அ, இ உ) ஆ, இ ங) அ, ஆ ஈ) அ, ஆ, இ
4. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
5. *சொற்றொடர்களை முறைப்படுத்துக.*
   அ) ஏறு தழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி
   இ) தழுவிப்பிடித்தல் என்கிறது
   க) ஆ - அ - இ உ) ஆ - இ - அ ங) இ - ஆ - அ ச) இ - அ - ஆ
6. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச் சொற்கள் ஆ) வட சொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
7. பெரிய புராணத்தை எழுதியவர் ............
   அ) சேக்கிழார் ஆ) கம்பர் இ) வால்மீகி ஈ) தண்டி

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**14 வது வினா கட்டாய வினா:** 5×2=10

8. தமிழோவியம் கவிதையில் உங்களை ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
9. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
10. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரிய புராணம் எதனை ஒப்பிடுகிறது?
12. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?
13. பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப்பொருள் விளக்குக.
14. “விடல்” என முடியும் குறட்பாவினை எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி (18வது வினா கட்டாய வினா) 3×3=9

15. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

16. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

17. தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

18. "தித்திக்கும்" எனத் தொடங்கி "விளம்பக் கேள்" வரையிலும் உள்ள தமிழ்விடுதூது மனப்பாடச் செய்யுளை எழுதுக.

IV. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி: 3×2=6

19. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க:
   1. இளமையில் கல்வி ................
   2. கற்றோர்க்குச் சென்ற ................

20. *பிழை நீக்கி எழுதுக:*
   1. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.
   2. மழையே பயிர்க்கூட்டமும், உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

21. *கலைச்சொல் தருக:*
   1. Excavation 2. Hero stone

22. *பகுபத உறுப்பிலக்கணம் தருக :* பரப்புமின்

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×5=10

23. சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

24. "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

25. மாணவர்களாகிய நீங்கள் பாராட்டுப் பெற்ற சூழல்கள் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

VI. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடையளி: 1×8=8

26. பெரிய புராணம் காட்டும் திருநாட்டு சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

27. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

---------

QN TUTICORIN www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com